# குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்தல்: நீதிமன்றத்திற்கு வெளியால் குடும்ப சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல்

குறிப்பாக உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால், நீங்கள் விவாகரத்து செய்வதும் மற்றும் திருமண பந்தத்திலிருந்து பிரிவதும் கஷ்டமான விடயமாக இருக்கலாம். பெற்றோர் சம்பந்தமான கடமை ஏற்பாடுகளையும் மற்றும் நிதி விடயங்களையும் ஒழுங்கு செய்ய உங்களுக்கு அவசியம் எனும் வித்தியாசமான தீர்மானங்களை எடுப்பதில் உங்களுக்கு அழுத்தத்தமும் இருக்கலாம்.

இந்த ஆவணம்

- குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறைகளின் வித்தியாசமான வகைகள் பற்றிய சில பொதுவான தகவல்களை உங்களுக்கு வழங்கும், மற்றும்
- நீதிமன்றம் செல்லாமல் உங்களின் முன்னாள் துணைவருடன் ஒரு உடன்பாட்டிற்கு நீங்கள் வருவதற்கும் மற்றும் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய தெரிவு முறைகளை நீங்கள் புரிந்துகொள்வதற்கும் உதவும்.

## இந்தப் பக்கத்தில்

- குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்தல்
- சட்டம் பற்றிய தகவல்களையும் மற்றும் சட்ட ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளல்
- குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறை பொருத்தமற்றதாக இருக்கலாம் எனும் போது – பாதுகாப்பு மற்றும் ஏனைய கருசனை விடயங்கள்
- பேசித்தீர்த்தல், மத்தியஸ்தம் செய்தல் மற்றும் கூட்டிணைந்த சட்டம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசங்கள்
- உங்களின் குடும்ப முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மிகச்சிறந்த அணுகுமுறையை எவ்வாறு தீர்மானித்துக்கொள்ளல்
- நீங்கள் எப்போது நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும்
- உங்களின் மாகாணத்தில் கிடைக்கக்கூடிய குடும்ப நீதிச் சேவைகள்

முதலிய அம்சங்கள் உள்ளடங்கியிருக்கும்.

## குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்தல்

'குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறை' *விவகாரத்து சட்டத்திலுள்ள* ஒரு புதிய அம்சமாகும். இந்த நடபடிமுறை பெற்றோர் கடமை, பிள்ளைக்கான உதவி, மற்றும் சில குடும்பங்களில் இருக்கும் சொத்து சார்ந்த பிரச்சினைகள்

போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குடும்பங்கள் பயன்பெறக் கூடிய வகையில் நீதிமன்றங்களுக்கு வெளியால் கிடைக்கக்கூடிய பல நடபடிக்கைகள் பற்றி விவரிப்பதற்கு பயன்படுகின்றது. பேசித்தீர்த்தல், மத்தியஸ்தம் செய்தல், கூட்டிணைந்த சட்டம் மற்றும் நடுத்தீர்ப்பு என்பன குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் வகைகளாகும். இவை பற்றி கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

**குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறையிலிருந்து பயன்பெறல்: புதிய சட்டக் கடப்பாடுகள்**

2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆம் திகதி, பாராளுமன்றம் குடும்ப முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பான பயனுள்ள மாற்றங்களை *விவகாரத்து சட்டத்திற்கு* அறிமுகப்படுத்தியது. இந்த மாற்றங்கள் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் திகதி முதல் ஏற்புடையதாக இருக்கும்.

மத்தியஸ்தம் செய்தல் போன்ற பல குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறைகள் ஏற்கெனவே உங்களுக்காக காணப்படுவதால், குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் தெரிவு முறைகள் நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்வதை தேவைப்படுத்தாது. *விவாகரத்து சட்டம்* குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறை பொருத்தமாயின், அதனைப் பயன்படுத்தி உங்களின் குடும்ப சட்டப் பிரச்சினைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு புதிய விடயத்தைக் கூறுகின்றது. (https://www.justice.gc.ca/eng/fl-df/fsdpo-fiopa.html).

குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஒரு நடபடிமுறை தெளிவாக குடும்பப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பொருத்தமற்றதாக இருப்பின், சட்ட ஆலோசகர்கள் நீங்கள் அவர்களின் வாடிக்கையாளர்கள் என்ற வகையில் தற்பொழுது அத்தகைய குடும்பப் பிரச்சினைகளை நீங்கள் தீர்த்துக்கொள்ளக்கூடிய விதத்தில் உங்களை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு கடமைப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்றது.

திருமண பந்தத்திலிருந்து பிரிதல் அல்லது விவாகரத்து செய்தல் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றி மக்கள் தீர்மானங்களை எடுக்கக்கூடிய பல வழிமுறைகள் இருக்கின்றன. உங்களுக்கும் மற்றும் உங்கள் குடும்பத்திற்கும் மிகச்சிறந்தது என நீங்கள் கருதும் அணுகுமுறையை நீங்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் முரண்பாடுகளைத் தீர்க்கும் எத்தகைய நடபடிமுறையை தீர்மானித்தாலும், அது முக்கியமாக உங்களது பிள்ளைகளின் நலன் சார்ந்ததாக இருப்பது அவசியமாகும்.

**உடன்பாட்டின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலுள்ள நன்மைகள்**

ஒரு நீதிபதி எடுக்கும் தீர்மானங்களை விடவும், உடன்பாட்டின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உங்களுக்கு பல நன்மைகள் இருக்கின்றன.

- உங்களது பிள்ளைகளின் தேவைகளை நீங்கள் புரிந்துகொள்ளலாம்
- குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறை செலவு குறைந்ததாகவும் மற்றும் நீதிமன்றத்திற்கு சென்று தீர்மானங்களைப் பெறுவதை விடவும் அதிக விரைவில் அத்தகைய தீர்மானங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கலாம்
- பெற்றோர்களின் ஒத்துழைப்பை பிள்ளைகள் காண்பதற்கு அது சிறந்ததாக இருக்கலாம்
- குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் சில நடபடிமுறைகள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ளும் உங்களின் ஆற்றலை அதிகரிப்பதற்கு உதவியாக இருக்கலாம்

புதிய *விவாகரத்து சட்டத்தின்* கீழ் பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகளுக்கான கடமை மற்றும் உதவி விடயங்கள் என்பன தொடர்பான முரண்பாடுகளிலிருந்து அவர்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான கடமை இருக்கின்றது. பெற்றோர்களின் கடமைகள் பற்றிய மேலதிகமான தகவல்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம் (தகவல் அட்டை – பெற்றோர் கடமைகள்).

## சட்டம் பற்றிய தகவல்களையும் மற்றும் சட்ட ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளல்

உங்களுக்கு சட்ட ஆலோசனையை வழங்கும் அல்லது *விவகாரத்து* சட்டத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகளில் உங்களைப் பிரதிநிதிப்படுத்தும் தகுதியான எவரேனும் ஒருவர் சட்ட ஆலோசகராவார். சட்டத்தரனிகள், ஆயினும் உங்களின் மாகாணத்திலுள்ள தகுதியான ஏனையவர்களும் அடங்குவார்கள். உதாரணமாக, கியூபெக் மாகாணத்திலுள்ள நொத்தாரிசுகள் குடும்ப ஆலோசனை சேவையை வழங்கலாம்.

குடும்ப சட்டப் பிரச்சினைகள் சிக்கல்வாய்ந்தனவாக இருக்கலாம். சட்ட ஆலோசகர் ஒருவர் நீங்கள் திருமண பந்தத்திலிருந்து பிரிதல் அல்லது விவாகரத்து செய்தல் முதலிய சகல விடயங்களிலும் வித்தியாசமான நேரங்களிலும் மற்றும் வித்தியாசமான வழிகளிலும் உங்களுக்கு உதவலாம், அந்த ஆலோசகர்கள்:

- உங்களுக்கும் ஏனையவர்களுக்கும் இருக்கின்ற சட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்
- உங்களுக்கு இருக்கின்ற தெரிவு முறைகள்
- சட்டப் பிரச்சினைகள் எவ்வாறு ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்படலாம்
- நீதிமன்றங்கள் எவ்வாறு தொழிற்படும்
- அநேகமாக பிரச்சினைகள் நீதிமன்றத்தினூடாகவும் மற்றும் குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறைகளினூடாகவும் எவ்வளவு விரைவாக தீர்க்கப்படலாம்
- ஒரு உடன்பாட்டை எட்டுவதிலுள்ள அல்லது ஒரு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதிலுள்ள நன்மைகள் மற்றும் தீமைகள்

முதலியன பற்றி உங்களுக்கு தெளிவுபடுத்தலாம்.

நீங்கள் ஒரு பெற்றோர் கடமைகள் திட்டத்தில் அல்லது ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு **முன்னர்** சட்ட ஆலோசகர் ஒருவருடன் நீங்கள் கதைப்பது பரிந்துரைக்கப்படுகின்றது. அவர்கள் உங்களுக்கு தெளிவுபடுத்தலாம் எனும் முக்கியமான சிலவற்றை நீங்கள் மறந்திருக்கலாம்.

உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால், பாடசாலைகளுக்கும், மருத்துவர்களுக்கும், மற்றும் அரச திணைக்களங்களுக்கும் உங்களது எழுத்திலான உடன்படிக்கையின் அல்லது நீதிமன்ற உத்தரவின் பிரதியை சமர்ப்பிப்பதற்கு நீங்கள் தேவைப்படுத்தப்படலாம். இந்த ஆவணம், பிள்ளையை எந்தப் பெற்றார் கவனிக்கலாம் மற்றும் உங்களின் பிள்ளைகள் பற்றிய தீர்மானங்களை யார் எடுக்கலாம் என்ற விடயங்களை அத்தகைய தரப்புகள் அறிந்துகொள்ள உதவலாம். சட்ட ஆலோசகர்கள் உங்களின் ஆவணங்கள் தெளிவாகவும் மற்றும் புரிந்துகொள்வதற்கு இலகுவாகவும் இருக்கின்றனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு உதவலாம்.

குறிப்பாக குடும்ப வன்முறை, தெளிவான துஷ்பிரயோகம் அல்லது கடுமையான உளவியல் நோய் இருந்துள்ளது எனும் சந்தர்ப்பங்களில், சட்ட ஆலோசகர் ஒருவரின் உதவியை நாடுவது முக்கியமானதாக இருக்கலாம். குடும்ப வன்முறை பற்றிய மேலதிகமான தகவல்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம் https://www.justice.gc.ca/eng/fl-df/pdf/fsfdr-firdf-eng.pdf

## குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறை பொருத்தமற்றதாக இருக்கலாம் எனும் போது – பாதுகாப்பு மற்றும் ஏனைய கருசனை விடயங்கள்

அதி முரண்பாடு, அதிகார சமத்துவமின்மை அல்லது குடும்ப வன்முறை ஆகிய விடயங்கள் அடங்கலாக குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஒரு சில நடபடிமுறை வகைகள் பொருத்தமற்றதாக இருக்கலாம். உதாரணமாக, ஒரு பெற்றாருக்கு மற்றய பெற்றாரை கட்டுப்படுத்தும் அதிகாரப் பலம் இருந்தால்,

இரண்டு பெற்றோர்களும் ஒரே அறையில் வசிக்கும் போது, மற்றய பெற்றார் தமக்காக அல்லது அவர்களின் பிள்ளைகளுக்காக கதைக்க இயலாதுபோகலாம்.

மத்தியஸ்தம் செய்வதற்கு உத்தரவுபெற்ற மத்தியஸ்தர்களும் மற்றும் ஏனைய குடும்ப சட்ட நீதி நிபுணர்களும், குறித்த சந்தர்ப்பசூழ்நிலைகளில், குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் அணுகுமுறையைத் தீர்மானிக்க உதவும் வகையில் குடும்ப வன்முறையையும் மற்றும் ஏனைய காரண விடயங்களையும் உங்களிடம் வினவுவார்கள். குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறையில் உங்களுக்கு மனக்குறைகள் இருந்தால், குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஒரு நடபடிமுறை சாத்தியப்படுமான எனப் பார்ப்பதற்கு இந்த விடயத்தை அவர்களுடன் கலந்துரையாடுவது முக்கியமானதாகும்.

## பேசித்தீர்த்தல், மத்தியஸ்தம் செய்தல் மற்றும் கூட்டிணைந்த சட்டம் ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசங்கள்

ஒரு குடும்ப சட்ட முரண்பாட்டை நீதிமன்றத்திற்கு வெளியால் தீர்க்கக்கூடிய பல வழிகள் இருக்கின்றன. புதிய *விவாகரத்து சட்டம்* பேசித்தீர்த்தல், மத்தியஸ்தம் செய்தல் மற்றும் கூட்டிணைந்த சட்டம் பற்றி குறிப்பிடுகின்றது. எனினும், குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஏனைய வழிவகைகளும் இருக்கின்றன. சில மாகாணங்கள் குடும்ப சட்ட முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு நடுத்தீர்ப்பு முறையை அனுமதிக்கின்றன.

நீங்கள் இருக்கும் நிலைமையைப் பொறுத்து உங்களுக்கு சிறந்த அணுகுமுறையைத் தீர்மானித்துக்கொள்ள முடியும்.

## பேசித்தீர்த்தல்

சட்ட ஆலோசகர் ஒருவரின் உதவியுடன் அல்லது உதவியின்றி பேசித்தீர்க்கலாம். இந்த நடபடிமுறை நீங்கள் திருமண பந்தத்திலிருந்து பிரிவது மற்றும் விவாகரத்து செய்வது தொடர்பான பிரச்சினைகள் பற்றிய ஒரு இணக்கப்பாட்டிற்கு அல்லது ஒரு உடன்பாட்டிற்கு வரும் வகையில் முயற்சிக்கச்செய்வதற்கு உங்களுக்கும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் சம்பந்தப்படும்.

ஒரு **பெற்றோர் கடமைகள் திட்டம்** திருமண பந்தத்திலிருந்து பிரிந்த அல்லது விவகாரத்து செய்த பின்னர் பெற்றோர் அவர்களின் பிள்ளைகளை எவ்வாறு போஷித்துப் பராமரிக்க வேண்டும் என்பது பற்றி விவரிக்கும். இந்தப் பெற்றோர் கடமைகள் பற்றிய திட்டங்கள்**,** ஒன்றாக வசிக்காத பெற்றோர்கள் அவர்களின் பிள்ளைகளை கவனித்துப் பராமரிப்பது எவ்வாறு மற்றும் இரண்டு வீடுகளிலுமுள்ள அவர்களின் பிள்ளைகள் பற்றிய முக்கியமான தீர்மானங்களை எடுப்பது எவ்வாறு என்பது பற்றி விவரிக்கும். குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் நடபடிமுறைகளில் ஏதாவதொன்றினூடாக நீங்கள்

ஒரு பெற்றோர் கடமைகள் திட்டத்தைத் தீர்மானித்துக்கொள்ளலாம். பெற்றோர் கடமைகள் பற்றிய திட்டங்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://www.justice.gc.ca/eng/fl-df/pdf/fsfdr-firdf-eng.pdf எனும் விடயத்தைப் பார்க்கவும்.

## கூட்டிணைந்த சட்டம்

கூட்டிணைந்த சட்டம் என்பது குறிப்பிட்டவொரு வகையான பேசித்தீர்க்கும் நடபடிமுறையாகும். கூட்டிணைந்த சட்டத்தில், நீங்களும் மற்றும் உங்களது முன்னாள் துணைவரும், உங்களது சட்ட ஆலோசகர்களும் மற்றும் எவரேனும் ஏனைய நிபுணர்களும் (உதாரணமாக: நிதி ஆலோசகர்கள், உளவியல் சுகாதார நிபுணர்கள் அல்லது கணக்காளர்கள்) ஒரு உடன்பாட்டிற்கு வந்து கூட்டிணைந்து தொழிற்பாடுவதற்கான அவகாசம் இருக்கின்றது. கூட்டிணைந்த நடபடிமுறையின் போது, நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் ஏதாவது நீதிமன்ற கோரல்களை முன்வைப்பதற்கு உடன்படுதல் கூடாது.

## மத்தியஸ்தம் செய்தல்

ஒரு நடுநிலை வகிக்கும் மூன்றாந்தரப்பு, மத்தியஸ்தம் செய்யும் ஒருவராவார். இவர் நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் பெற்றோர் கடமைகள், திருமண பந்தத்திலிருந்து பிரிதல் அல்லது விவகாரத்து செய்தல் என்பன பற்றிய விடயங்களை இனங்கண்டு கலந்துரையாடுவதற்கு உதவலாம். மத்தியஸ்தம் செய்பவர்கள் நீங்கள் குறித்த விடயங்களை இனங்காணுவதற்கும் மற்றும் சாத்தியமான தீர்வுகளின் அடிப்படையில் தொழிற்படுவதற்கும் உங்களுக்கு உதவலாம். மத்தியஸ்தம் செய்யும் போது, நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் உங்களுக்கு மட்டும் என்ன தேவையோ மற்றும் என்ன அவசியமோ அவற்றையெல்லாம் நேரடியாக ஒருவருக்கொருவர் கூறுங்கள். உங்களுக்கு பிள்ளைகள் இருந்தால், உங்களின் பிள்ளைகளுக்காக எது சிறந்தது என நம்புகின்றீர்களோ அவற்றையும் நீங்கள் கூறலாம்.

மத்தியஸ்தம் செய்பவர் பக்கச்சார்பாக இருக்க அல்லது உங்களுக்கான தீர்மானங்களை எடுக்க மாட்டார். மத்தியஸ்தம் செய்பவர்கள் உங்களுக்கு சட்ட ஆலோசனையை வழங்கவும் மாட்டார்கள். மத்தியஸ்தம் செய்பவர் நீங்கள் ஒரு உடன்பாட்டிற்கு வருவதற்கு உதவுவார், இறுதியில் நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் உங்களது பிள்ளைகளுக்கான சிறந்த பெற்றோர் கடமை ஏற்பாடுகள் அடங்கலாக தேவையான தீர்மானங்களை எடுப்பீர்கள்.

மத்தியஸ்தம் செய்தல் வழமையாக மற்ற நபருடன் நேரடியான கலந்துரையாடல்களில் சம்பந்தப்படுவதால், அது எல்லோருக்கும் பொருத்தமானதாக அமையாது. உதாரணமாக, குடும்ப வன்முறை இருந்துள்ளது அல்லது நிகழும் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருக்கின்றன எனில், அது உங்களுக்கும் மற்றும் மற்றய நபருக்கும் பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் மத்தியஸ்தம் செய்வதற்கு சாத்தியப்படாதிருக்கலாம்.

சில விடயங்களில், ஏனைய வகையான மத்தியஸ்தங்கள் சிறந்ததாகும். உதாரணமாக, **நெகிழ்தன்மை மத்தியஸ்தத்தில்** நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் ஒரே அறையில் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மத்தியஸ்தம் செய்பவர் தனித்தனியாக ஒரு நபருடன் கதைத்து அதன் பின்னர் மற்ற நபருடன் கதைப்பார். நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் நேருக்கு நேர் சந்திக்காமல் மத்தியஸ்தம் செய்பவரின் உதவியுடன் பிரச்சினைகளை பேசித்தீர்த்துக்கொள்ளலாம்.

தொலைபேசி அல்லது வீடியோ சம்பாஷணை போன்ற ஒரு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வித்தியாசமான இடங்களிலிருந்து மத்தியஸ்தம் செய்வதும் சாத்தியமாக இருக்கலாம். உதாரணமாக, நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் வித்தியாசமான நகரங்களில் வாழ்ந்தாலும் நீங்கள் இவ்வாறு மத்தியஸ்தம் செய்துகொள்ளலாம்.

## நடுத்தீர்ப்பு

சில மாகாணங்களில், பெற்றோர் கடமைகள், அதே போல் சொத்துக்கள் மற்றும் உதவி முதலியன போன்ற விடயங்களை **நடுத்தீர்ப்பின்** ஊடாக தீர்த்துக்கொள்ளலாம். நடுத்தீர்ப்பில், நீங்களும் மற்ற நபரும் நடுநிலை வகிக்கும் நபர் ஒருவரை அதாவது சட்டப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடுத்தீர்ப்பாளரை அனுமதிப்பதற்கு உடன்படுவீர்கள்.

நடுத்தீர்ப்பு ஒரு தனியாள் நடபடிமுறையாகும் என்பதால் நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் நடுத்தீர்ப்பாளருக்கும் அதே போல் உங்களின் தனிப்பட்ட சட்ட ஆலோசகர்களுக்கும் (உங்களுக்கு அத்தகையவர்கள் இருந்தால்) கொடுப்பனவை செலுத்துவது உங்களுடைய பொறுப்பாகும். நடுத்தீர்ப்பு ஒரு நீதிமன்ற விளம்பலை பார்க்கிலும் மிகவும் முறைசாராத ஒரு சிறந்த நடபடிமுறையாக கருதப்படுகின்றது.

## பெற்றோர் கடமைகள் ஒருங்கிணைப்பு

பெற்றோர் கடமைகள் ஒருங்கிணைப்பு என்பது பிள்ளைகளில் ஒருமுகப்படும் குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஒரு நடபடிமுறையாகும். இந்த நடபடிமுறை நீங்கள் ஒரு உடன்பாட்டை செய்த அல்லது பெற்றோர் கடமைகள் காலம் பற்றிய ஒரு உத்தரவைப் பெற்ற பின்னர் எழலாம் எனும் பெற்றோர் கடமைப் பொறுப்புக்கள் அல்லது பிள்ளைகளின் வாழ்க்கையில் பிள்ளைகளுக்கும் மற்றும் ஏனைய முக்கியமான நபர்களுக்கும் இடையிலான தொடர்பு முதலிய பெற்றோர் கடமைகள் பற்றிய முரண்பாடுகளைத் தீர்க்கக்கூடியதாகும். பெற்றோர் கடமைகளை ஒருங்கிணைப்பவர்கள் பெற்றோர் கடமைகள் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தம் செய்தல் மற்றும் நடுத்தீர்ப்பு ஆகிய நடபடிமுறைகளை ஒன்றாக இணைத்துப் பயன்படுத்தலாம். குடும்ப சட்டத்தரனிகள், உளவியல் சுகாதார நிபுணர்கள், சமூகப் பணியாளர்கள், குடும்ப உளவியலாளர்கள், மத்தியஸ்தம் செய்பவர்கள் மற்றும் நடுத்தீர்ப்பாளர்கள் ஆகியோர் பெற்றோர் கடமைகளை ஒருங்கிணைப்பவர்களாக இருக்கலாம்.

## உங்களின் குடும்ப முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மிகச்சிறந்த அணுகுமுறையை எவ்வாறு தீர்மானித்துக்கொள்ளல்

உங்களுக்கான குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் மிகச்சிறந்த தெரிவு முறையைத் தீர்மானிக்கும் போது, அது பற்றி சிந்திப்பதற்கு அதிக பல விடயங்கள் இருக்கின்றன. திட்டங்களைத் திட்டமிடுதல் விளம்பரத்தில், திருமண பந்தத்திலிருந்து பிரிந்த அல்லது விவாகரத்து செய்த பின்னர் பெற்றோர் கடமைகள் பற்றிய பயனுள்ள தகவல்கள் உள்ளடங்கியிருக்கும். உதாரணமாக, உங்களுக்கும் மற்றும் மற்றய பெற்றாருக்கும் இடையிலுள்ள முரண்பாடுகளின் அளவு பற்றி சிந்திப்பதற்கு நீங்கள் தேவைப்படுத்தப்படலாம்.

உங்களுக்கான தீர்மானங்களை எடுக்கும் நீதிபதி ஒருவர் அல்லது மத்தியஸ்தர் ஒருவர் போன்ற சிலரை நீங்கள் தீர்மானிக்கலாம் என்பது உங்களுக்கும் மற்றும் உங்களின் குடும்பத்திற்கும் மிகச்சிறந்த தெரிவு முறையாக அமையலாம்.

## நீங்கள் எப்போது நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும்

உங்களாலும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவராலும் ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியாது அல்லது ஒருசில விடயங்களில் மாத்திரம் உடன்பாட்டை எட்டமுடியும் எனும் சந்தர்ப்பத்தில், உங்களுக்கான தீர்மானத்தை எடுப்பதற்கு, நீங்கள் யாராவது நபர் ஒருவரை நாடவேண்டி இருக்கலாம்.

உங்களுக்கான தீர்மானத்தை எடுப்பதற்கு யாராவது நபர் ஒருவரை நாடுவதை அனுமதிக்கின்ற ஒரு வழிமுறைதான் நடுத்தீர்ப்பு.

நீங்கள் நீதிமன்றத்திற்கும் செல்லலாம். நீதிமன்றத்திற்கு செல்வது என்பது உங்களுக்கும் மற்றும் உங்கள் குடும்பத்திற்கும் பொருத்தமான முடிவுகளைப் பெற்றுத்தருமாறு ஒரு நீதிபதியிடம் கோருவதைக் கருதும். உடனடியாக ஒரு நீதிமன்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என நீதிமன்றத்தை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. நீதிமன்றம் அதற்கு நீண்டகாலத்தை எடுக்கலாம்.

நீதிமன்ற நடவடிக்கைகளில் பல கட்டங்கள் இருக்கின்றன. அத்தகைய கட்டங்கள், நீங்கள் எங்கு வசிக்கின்றீர்கள் என்பதைப் பொறுத்து வித்தியாசமாக இருக்கலாம். நீங்கள் நீதிமன்றம் செல்ல வேண்டும் என முடிவெடுத்தாலும் கூட, நீதிமன்றம் வேறு அணுகுமுறையினூடாக, சாத்தியமாயின், ஒரு உடன்பாட்டிற்கு வருமாறு உங்களையும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரையும் ஊக்குவிக்கும். உண்மையில், நீதிபதி ஒருவர், உதாரணமாக இணக்கப்பாட்டு சந்திப்பு என அழைக்கப்படும் ஒரு நடைமுறையைப் பின்பற்றி பெற்றோர் அவர்களாகவே நீதிமன்றத்திற்கு வெளியால் அவர்களின் குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு பணிக்கலாம். அத்தகைய ஒரு இணக்கப்பாட்டு சந்திப்புக்கு உடன்படுவதாக இருந்தால், மேலும் நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்லாமல் அத்தகைய குடும்பப்

பிரச்சினைகளில் சிலவற்றை அல்லது எல்லாவற்றையும் எவ்வாறு தீர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றி, நீதிபதி ஒருவர் உங்களுக்கும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவருக்கும் தெரிவு முறைகளைக் குறிப்பிடுவார்.

அதே போல், ஒரு நீதிமன்ற நடவடிக்கைக்கு செல்ல முன்னர், குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் ஏனைய சில வழிமுறைகளில் பங்குபற்றி உங்களின் அத்தகைய முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளுமாறு, உங்களின் மாகாணத்திலுள்ள நீதிமன்றங்கள் உங்களுக்கு பணிப்புரையை விடுக்கலாம்.

உங்களால் உங்களின் குடும்ப முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முடியாது எனும் பட்சத்தில், நீதிபதி ஒருவர் ஒரு விளம்பலை அல்லது ஒரு விசாரணையை நடத்தி அதன் பின்னர் ஒரு நீதிமன்ற உத்தரவைப் பிறப்பிப்பார். நீதிமன்ற உத்தரவு எதனைக் கூறுகின்றதோ அதனை நீங்கள் கட்டாயம் செய்ய வேண்டும்.

நீங்கள் செய்துகொண்டுள்ள ஒரு உடன்படிக்கையை ஒரு நீதிமன்ற உத்தரவில் உள்ளடக்குமாறும் நீங்கள் நீதிமன்றத்திடம் கோரலாம். இத்தகைய ஒரு உடன்படிக்கைக்கு நீங்களும் மற்றும் உங்களின் முன்னாள் துணைவரும் உடன்பட்டுள்ளதால், இது ‘விருப்பு உத்தரவு’ என அழைக்கப்படும். தரப்புகள் உடன்படாத போது அதனை விடவும் இந்த நடபடிமுறை மிகவும் இலகுவானதாகும்.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டியது

நீங்கள் உங்களின் குடும்ப முரண்பாடுகளை நீதிமன்றத்திற்கு வெளியால் தீர்க்கும் ஒரு நடபடிமுறையினூடாக தீர்த்துக்கொள்ளலாம். ஆயினும், ஒரு நீதிமன்றம் ஒரு விவாகரத்து உத்தரவை மாத்திரமே வழங்கலாம். நீதிபதி, விவகாரத்து உத்தரவைப் பிறப்பித்த உடன், நீதிமன்றம் உங்களுக்கு நீங்கள் இனிமேலும் விவாகமானவர் அல்ல என்பதை உறுதிப்படுத்தும் ஒரு விவகாரத்து சான்றிதழை வழங்கும்.

நீங்கள் ஒரு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதற்கு வேறு சில காரணங்களும் இருக்கலாம். உதாரணமாக, உங்களின் உடன்பாடு மற்றய மாகாணத்தில் அல்லது நாட்டில் ஒரு நீதிமன்ற உத்தரவாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமாயின், நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்வது அவசியமாகும்.

## உங்களின் மாகாணத்தில் கிடைக்கக்கூடிய குடும்ப நீதிச் சேவைகள்

திருமண பந்தத்திலிருந்து பிரிவதால் அல்லது விவாகரத்து செய்வதால் எழுகின்ற பிரச்சினை விடயங்களை மக்கள் கையாளுவதற்கு உதவும் பொதுத் துறை (அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்படும்) அல்லது தனியார் துறை (உங்களால் கட்டணம் செலுத்தப்படும்) இரண்டிலொரு குடும்ப நீதிச் சேவைகள் இருக்கின்றன. நீங்கள் பயனுள்ளது எனக் காணும் மத்தியஸ்தம் செய்தல் மற்றும் பெற்றோர் கடமைகள் பற்றிய தகவல் அமர்வுகள் போன்ற குடும்ப நீதிச்

சேவைகள் மாகாணங்களிலும் மற்றும் மாணிலங்களிலும் காணப்படுகின்றன. நீங்கள் ஏனைய அத்தகைய பயனுள்ள சேவைகளையும் உங்களது மாகாண அல்லது மாணில அரசாங்க இணையத்தளங்களை அணுகியும் பெற்றுக்கொள்ளலாம். தனியார் துறையிலுள்ள நிபுணர்களும் உங்களது மாகாணத்தில் அல்லது மாணிலத்தில் குடும்ப முரண்பாடுகளைத் தீர்க்கும் சேவைகளை வழங்கலாம்.

## தொடர்புடைய இணைய வசதிகள்

- திட்டங்களைத் திட்டமிடுதல்: திருமண பந்தத்திலிருந்து பிரிந்த அல்லது விவகாரத்து செய்த பின்னர் பெற்றோர் கடமைகள் தொடர்பான ஏற்பாடுகளுக்கான வழிகாட்டல்
- பெற்றோர் கடமைகள் திட்டத்தின் செவ்வைபார்த்தல் பட்டியல்
- பெற்றோர் கடமைகள் திட்ட சாதனத்திற்கான அணுகுபிரவேசம்
- மத்திய அரச பிள்ளைகள் உதவி வழிகாட்டல்கள்: கட்டம் - கட்டமாக